JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **18/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 6** | Prosecution /Defence / Court | |
| Name | நாதன் | Village | எல்லப்பாளையம், பெருந்துறை |
| Father's Name | ஆரன் | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 04.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 19.12.2019 ம் தேதி மாலை 5.00 மணி சுமாருக்கு நான் புலவன் தோட்டம் ரோடு வந்து கொண்டிருந்த போது பெருந்துறை காவல் நிலையத்திலிருந்து போலீசார் நின்று கொண்டு இருந்தவர்களை பார்த்து நான் என்னவென்று விசாரித்த போது இன்று காலை நடந்த வழிப்பறி சம்பவத்திற்காக சம்பவ இடத்தைப் பார்த்து படம் வரைந்து அதன் பின்னர் மற்றொரு தாளில் எழுதினார்கள். என்னையும், சதீஸ்குமாரையும் சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டதின் பேரில் நாங்கள் இருவரும் பார்வை மகஜர் சாட்சிகளாக இருக்கு ஒப்புக் கொண்டு பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக சதீஸ்குமாரும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு. அ.சா.1 சங்கீதா எனக்கு தெரிந்தவரா என்றால் இல்லை. சாட்சி வேண்டும் என்று யார் கேட்டார்கள் என்றால் நான் ரோட்டில் வந்து கொண்டிருந்தபோது விசாரித்துக் கொண்டிருந்தார்கள் யாரும் கேட்கவில்லை. நான் எங்கு குடி இருக்கிறேன் என்றால் எல்லைப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். போலீசார் நான் எங்கிருந்து எங்கு போய்க் கொண்டிருந்தேன் என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்றால் ஆமாம். போலீசார் அதை பதிவு செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். நான் எங்கிருந்து எத்தனை மணிக்கு கிளம்பி வந்தேன் என்றால் எல்லைபாளையத்திலிருந்து கிளம்பி மாலை 5 – 5.15 மணிக்கு வந்தேன்.

2. எங்கு போவதற்காக வந்தேன் என்றால் துடுப்பதி செல்வதற்காக வந்தேன். மேற்படி விபரங்களை போலீசார் பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ. 4 என்னென்ன விபரங்கள் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். என்னென்ன விவரங்கள் எழுதியிருந்தது என்றால் சம்பவ இடம் எவ்வளவு தூரம் என்றும், புளியமரம் ,கிணறு மற்றும் ரோட்டின் அகலத்தையும் எழுதினார்கள். கோயிலை போலீசார் குறித்துக் கொண்டார்களா என்றால் ஆமாம். என் முன்னால் எழுதியதில் கையெழுத்து வாங்கிக் கொண்டு என்னை அனுப்பி விட்டார்கள் என்றால் ஆமாம். என்னிடம் கையெழுத்து வாங்கும் போது எத்தனை பேர் அங்கு இருந்தார்கள் என்றால் 4– 5 பேர் இருந்தார்கள்.

3. அங்கிருந்தவர்களிடம் போலீசார் கையெழுத்து வாங்கினார்களா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. யார் என்னை விசாரித்தார்கள் என்றால் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார். எந்த ஊரில் இருந்து வந்தேன் என்று இன்ஸ்பெக்டர் சொன்னாரா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் என் முன்னிலையில் ஏதாவது கைப்பற்றினார்கள் என்றால் இல்லை. நான் சம்பவ இடத்துக்கு செல்லவில்லை காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை